[2013 மே 14

493—

சாலை வசதி

*__6489—திரு. நயினார் நாகேந்திரன்:__

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் முதல் தூத்துக்குடி மாவட்டம், ஏரல் முக்காணி வரை தாமிரபரணி நதியின் இருகரைகளிலும் சாலை அமைத்து நவகைலாயம், நவதிருப்பதி திருக்கோயில்களை இணைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் முதல் தூத்துக்குடி மாவட்டம், ஏரல் முக்காணி வரை தாமிரபரணி நதியின் இருகரைகளிலும் சாலை அமைத்து நவகைலாயம், நவதிருப்பதி திருக்கோயில்களை இணைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் முதல் தூத்துக்குடி மாவட்டம், ஏரல் முக்காணி வரை நவகைலாயம், நவதிருப்பதி திருக்கோயில்களை இணைத்து, தாமிரபரணி நதியின் இரு கரைகளிலும் சாலை அமைக்க தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகையும், ஈகையும் கொண்ட வள்ளல் மனத் தாயே! சதி வலைகளைத் தன்னுடைய மதி வலையால் தகர்க்கும் மாதரசே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆலைகள் செய்து, பள்ளிச் சாலைகள் செய்து, ஆலயம் காத்து அன்னைத் தமிழகத்தை அன்புச் சரணாலயமாக்கும் தாயுருவத் தெய்வமே! நீங்கள் நீராதாரம் காப்பதில் கழகம் தந்த கரிகால் பெருவளத்தான்! (மேசையைத்*

தட்டும் ஒலி) நீங்கள் நீராதாரம் காப்பதில் கழகம் தந்த கரிகால் பெருவளத்தான்! நீதியாதாரம் காப்பதிலோ, அம்மா, நீங்கள் மனு நீதியின் மறு உருவம்! (மேசையைத் தட்டும் ஒலி) நீதியாதாரம் காப்பதிலோ, அம்மா, நீங்கள் மனு நீதியின் மறு உருவம்! சிந்தையில் உதித்த திட்டங்களைச் சிந்தாமல் செயல் வடிவமாக்கி, இந்திய தேசத்தையே விழி விரித்துப் பார்க்க வைக்கும் எந்தையே! எந்நாளும் விந்தையே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய தேசத்தையே எந்நாளும் விழி விரித்துப் பார்க்க வைக்கும் எந்தையே! இந்தியாவின் விந்தையே! கனிவின் மறு உருவமே! கழகத்தின் காவல் தெய்வமே! மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில்தான் வற்றாத ஜீவநதியாக தாமிரபரணி ஆறு ஓடுகிறது. அது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். தாமிரபரணி ஆற்றின் இருகரைகளிலும்தான் நவதிருப்பதி, நவகைலாயங்கள் இருக்கின்றன. நவகிரகங்களுக்கான கோயில்கள் தஞ்சை மாவட்டம் முழுவதிலும் இருக்கின்றன. அங்கெல்லாம் மூல ஸ்தலத்தில் சிவபெருமான் இருப்பார். அதற்குப் பக்கத்தில் உள்ள தெய்வங்களாகத்தான் நவகிரகங்கள் இருக்கும். ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணி ஆற்றங்கரையில் இருக்கும் நவதிருப்பதி, நவகைலாயத்தில் சிவபெருமானும், பெருமாளுமே நவகிரகங்களாகக் காட்சி தருகின்றனர். அற்புதமான கோயில்கள், திருத்தலங்கள் இருக்கக்கூடிய இடமாகத்தான் தாமிரபரணி ஆற்றங்கரை விளங்குகிறது. புனிதமான நதிக்கரை உள்ளது தாமிரபரணி ஆறு. பாபநாசத்திலிருந்து திருநெல்வேலி 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. திருநெல்வேலியிலிருந்து முக்காணி 49 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. பாபநாசம், சேரன்மகாதேவி, கோடகநல்லூர், சங்காணி என்ற குன்னத்தூர், மொறப்பநாடு, சேர்ந்த பூமங்கலம், ராஜபதி, ஸ்ரீவைகுண்டம், தென்திருப்பேரை இவை அனைத்தும் நவகைலாயம். நவதிருப்பதி ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, திருப்புளிங்குடி, நத்தம் என்கிற திருவரகுணமங்கை, பெருங்குளம், ரெட்டை திருப்பதி 1, ரெட்டை திருப்பதி 2, திருக்கோலூர், தென்திருப்பேரை ஆகும். இவை சுற்றுலாத் தலங்களில் தொன்மை வாய்ந்ததொரு திருத்தலங்களாக இருக்கின்றன. சுற்றுலாத் தலங்களாக இவை அறிவிக்கப்பட்டு, சிங்கப்பூர்,

மலேசியா போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தருகின்ற இடங்களாக விளங்குகின்றன. எனவே, தாமிரபரணி நதியின் இருகரைகளிலும் சாலைகள் அமைப்பதன் மூலமாக இத்திருத்தலங்களை இணைக்க இயலும். மதுரையில் வைகை ஆற்றங்கரையில் எல்லாம் சாலைகள் அமைத்திருக்கிறார்கள். அதன்மூலமாகப் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற காரணத்தினாலும், தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இல்லை என்று சொல்லாத ஓர் அரசாக இருக்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, தாமிரபரணி நதியின் இருகரைகளிலும் சாலை அமைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பயணிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, சாத்தியக்கூறுகள் இருப்பின், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 494, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*